பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

S. M. FERNANDO
OPTICIANS
· SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

# உதயன்

விலை ரூபா 5-00

கண்வைத்திய நிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாக வழங்குபவர்கள்
எஸ். எம்.
பெர்னாண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 பங்குனி 05 வியாழக்கிழமை (18-03-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 111

பம்பாய் நகரைத் தொடர்ந்து

# கல்கத்தாவிலும் நேற்று அதிகாலை சக்தி மிக்க குண்டுகள் வெடித்தன!

## அடுக்குமாளிகைகள் தகர்வு
## 60 பேர் பலி; 125 பேர் காயம்

### அவர்களில் 45 பேரின் நிலை கவலைக்கிடம்

புதுடில்லி, மார்ச் 18

பம்பாய் நகரில் சக்தி மிகுந்த குண்டுகள் அடுத்தடுத்து வெடித்து ஐந்து நாட்கள் முடிவதற்குள் செவ்வாய் நள்ளிரவுக்குப் பின்—நேற்று அதிகாலை—மேற்கு வங்கத் தலைநகர் கல்கத்தாவிலும் அதிசக்தி வாய்ந்த குண்டுகள் வெடித்தன.

இந்த வெடிகுண்டுகளினால் அடுக்கு மாடிக் கட்டடங்கள் இரண்டு முற்றாகத் தகர்ந்தன; அக்கட்டடங்களில் இருந்த பொது மக்கள் அறுபது பேர் உயிரிழந்தனர். 125 பேர் வரை படுகாயமடைந்தனர். அவர்களில் சுமார் 45 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கல்கத்தா நகரில் பொலீஸ் தலைமைக் காரியாலயத்தில் இருந்து அரை மைல் தூரத்தில் உள்ள அடுக்கு மாளிகை குடியிருப்புக் கட்டடங்களிலேயே வெடி குண்டுகள் வெடித்தன.

இதனால் இரு கட்டடங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாதை திறப்பது குறித்து
## ஐ.நா. தூதரக அதிகாரிகள் இன்று பூநகரிக்கு வருகை

கொழும்பு, மார்ச் 18

பூநகரிப்பாதையை திறப்பது குறித்து நேரில் ஆராயும் பொருட்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அதிகாரிகள் குழு ஒன்று இன்று காலை பூநகரிக்கு செல்லவிருக்கிறது.

தற்பொழுது மடு அகதி முகாமுக்கு வந்துள்ள பிரஸ்தாப மூவர் அடங்கிய தூதுக் குழுவினர் இன்று பூநகரிக்கு விஜயம் செய்து அங்கு பாதையை பாவிப்பது தொடர்பாக ஆராயவிருக்கின்றனர்.

பூநகரி இராணுவ அதிகாரிகளுடன் பேச்சு நடத்தவிருக்கும் இக்குழுவினர் பாதைகளையும் பார்வையிடுவர்.

அதைத் தொடர்ந்து கொழும்பு திரும்பும் ஐ நா. குழுவினர் கேரதீவுப் பகுதியைப் பார்வையிட யாழ்ப்பாணம் வரவும் திட்டமிட்டுள்ளதாகவும் தெரியவந்தது.

## ஜேர்மன் தூதுவர் இங்கு அடுத்த வாரம் வருகிறார்

கொழும்பில் கடமையாற்றும் இலங்கைக்கான ஜேர்மன் தூதுவர் அடுத்த வாரம் யாழ்ப்பாணம் வர திட்டமிட்டுள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

விமான மூலம் பலாலிக்கு வந்து அங்கிருந்து அவர் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

குடாநாட்டின் பல இடங்களுக்கும் ஜேர்மன் தூதுவர் நேரடியாக விஜயம் செய்து இங்குள்ள நிலைமையை பார்வையிடுவார் என்றும் —

பொருளாதாரத் தடையால் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் நிலைமையை அவர் கேட்டறிந்து கொள்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ 3)

## 'வாதுவ'விலிருந்து பொருள் இறக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

மண்ணெண்ணெய், அரிசி, மா, சீனி என்பவற்றுடன் 'வாதுவ' கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறையை வந்தடைந்தது.

யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் திரு. செ. பத்மநாதன் கப்பலில்வந்த பொருள்களைப் பொறுப்பேற்றதை அடுத்து 'பொருள்களை இறக்கும் வேலைகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

கப்பலில் எடுத்து வரப்பட்ட 415 பரல் மண்எண்ணெய்யை இறக்கும் வேலைகள் முதலில் ஆரம்பிக்கப்பட்டன.

ஆயிரத்து 900 மெற்றிக் தொன் மா, ஆயிரத்து 500 மெற்றிக் தொன் அரிசி, 300 மெற்றிக் தொன் சீனி, 338 மெற்றிக் தொன் கால்நடை உணவு, 20 மெற்றிக் தொன் சவர்க்காரம், 200 மெற்றிக் தொன் பருப்பு, 98 பரல் தேங்காய் எண்ணெய், 35 பரல் டீசல் மற்றும் 50 பெட்டி நெசவு நூல், சாயம் என்பன இக்கப்பலில் எடுத்துவரப்பட்டுள்ளன.

[இ-5-162-15-87-109]

## 760 தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 18

நேற்றுப் பருத்தித்துறையை வந்தடைந்த 'வாதுவ' கப்பலில், உள்ளூர், வெளிநாட்டுத் தபால்கள் அடங்கிய 760 பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளன.

தபால் பொதிகளை எடுத்து வருவதற்காக யாழ். பிரதம தபாலக ஊழியர்கள் நேற்று வேளையுடன் பருத்தித்துறைக்குச் சென்றிருந்தனர். எனினும் நேற்று நள்ளிரவு வரை தபால் பொதிகள் யாழ் பிரதம தபாலகத்துக்கு எடுத்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நான்கு படகுகளை படையினர் கட்டி இழுத்துச் சென்றனர்

### கிளாலித் தாக்குதலில் தப்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்த பின்னர், என்னை மூடி இருந்த பாயை விலத்தி விட்டுப் பார்த்தபோது எனது படகு உட்பட நான்கு படகுகளையும் படையினர் கட்டி இழுத்துச் செல்வதைக் கண்டேன். இதன் பின்னர் சுமார் ஐந்து மணி நேரம் நீந்தி கரையை அடைந்தேன்.

நேற்று முன்தினம் கிளாலிக் கடலில் இடம்பெற்ற கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் தப்பி வந்த படகோட்டியான ஆனைக்கோட்டையைச் சேர்ந்த செல்வராசா குணலிங்கம் (வயது 35) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பவம் குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த செவ்வாய் அதிகாலை 4-00 மணி அளவில் ஆலங்கேணியில் இருந்து எனது படகும் மற்றும் மூன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மாலை 6 மணிக்குப் பின்னர்
## தீவுப்பகுதியில் நடமாடத் தடை!

### அங்கிருந்து திரும்பியவர் தகவல்

யாழ்ப்பாணம், மார்ச் 18

இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள தீவுப் பகுதியில் மாலை ஆறு மணிக்குப்பின்னர் பொது மக்கள் எவரும் வீதிகளில் நடமாட முடியாது. மக்கள் நடமாட்டம் தடைசெய்யப்பட்டுள்ளது பகலிலோ போக்குவரத்து வசதி கிடையாது. பெரும்பாலான மக்கள் நடந்தே செல்கின்றனர். சிலர் சைக்கிள்களைப் பயன்படுத்துகின்றனர். மக்கள் எண்ணிக்கை மிகக் குறைவாக இருப்பதால் ஒரு சில பிரதான வீதிகளைத் தவிர ஏனையவை பற்றைகள் முளைத்து, காடு மண்டிக் கிடக்கின்றன.

இவ்வாறு தீவுப் பகுதியில் [illegible] கொழும்பு சென்று அங்கிருந்து நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார். அவர் இப்போது நாவாந்துறையில் தங்கி உள்ளார்.

தீவுப்பகுதி நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்த தக

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரையோர நகரங்களிலேயே குண்டுகள் வெடித்துள்ளன

புதுடில்லி, மார்ச் 18

கரையோர நகரங்களிலேயே குண்டுகள் வெடித்திருக்கின்றன. இது ஓர் முக்கியமான விடயமாகும்.

—மத்திய உள்துறை இணை அமைச்சர் ராஜேஸ் பைலட் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

கல்கத்தாவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக் குறித்து

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டிலும் தீவிர பாதுகாப்பு!

சென்னை, மார்ச் 18

பம்பாய் மற்றும் கல்கத்தா குண்டு வெடிப்புச் சம்பவங்களை அடுத்து தமிழகத்தில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருக்கிறது.

இது தொடர்பாக உயர் பாதுகாப்பு அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஜெயலலிதா அவசர மாநாடு ஒன்றை நடத்தினார்.

நகரில் உள்ள மாடிக் கட்டடங்கள் மற்றும் கேந்திர நிலையங்கள் தீவிர பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## மற்றும் பல இடங்களில் தாக்குதல்கள் நடக்கலாம்

மணிலா, மார்ச் 18

இந்தியாவின் முக்கிய நகரங்களான பம்பாயிலும் கல்கத்தாவிலும் குண்டுகள் வெடித்திருப்பதை அடுத்து தேசிய அளவில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மற்றும் பல இடங்களில் பயங்கரவாதிகளின் தாக்குதல்கள் நடக்கலாம் என எதிர்பார்ப்பதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில் —

பம்பாயில் தொழிற்சாலை ஒன்றில் இருந்து வெளியான விஷ வாயுவை சுவாசித்து 9 பேர் உயிரிழந்தனர். 51பேர் மிகமோசமான நிலையில் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர். (உ-5)

## ஐக்கிய அரபு எமிரேற்ஸிலிருந்து
## 2 முஸ்லிம்களை நாடு கடத்த கோருகின்றது இந்தியா

புதுடில்லி, மார்ச் 18

பம்பாய்க் குண்டு வெடிப்புச் சம்பவங்களுடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்பட்டுள்ள இரு நபர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படி ஐக்கிய அரபு எமிரேற்ஸை இந்தியா கோரியுள்ளது.

மேமன் என்ற குடும்பப் பெயரைக் கொண்ட இரு முஸ்லிம் சகோதரர்களும் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற மறுநாள் பம்பாயில் இருந்து டுபாய்க்குப் புறப்பட்டுச் சென்றனர் என்றும் —

மற்றைய இரு சகோதரர்கள் கடந்த சனிக்கிழமை புறப்பட்டுச் சென்றனர் என்றும் உள்துறை அமைச்சர் எஸ்.பி. சவான் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை டுபாய் சென்ற இரு மேமன் சகோதரர்களும் பம்பாய் குண்டு வெடிப்புச் சம்பவத்துடன் ஏதோ ஒரு விதத்தில் சம்பந்தப்பட்டுள்ளார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (உ-எ)

## மேலும் இருவர் கைது

மணிலா, மார்ச் 18

பம்பாய் குண்டுவெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக மேலும் இருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர் என்றும்—

இவர்களின் கைது புலன் விசாரணைகளுக்குப் பெரிதும் உதவும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரையில் மொத்தம் ஆறுபேர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும்—

நேற்று முன்தினம் கைது செய்யப்பட்ட இருவரின்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# உடுகம்பொலவின் கடிதம் நீதிமன்றம் ஏற்றது

கொழும்பு, மார்ச் 18

தலைமறைவாகியுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரேமதாஸா உடுகம்பொல தனது சட்டத்தரணி ஒருவருக்கு எழுதிய கடிதம், கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது வாசிக்கப்பட்டது.

சக்தி வாய்ந்த சிலரால் தமது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதால் தாம் நீதிமன்றத்தில் சமுகமளிக்கமுடியாதிருப்பது குறித்து வருந்துவதாகவும் அக்கடிதத்தில் உடுகம்பொல தெரிவித்திருக்கிறார்.

கடிதத்தை அவரது சட்டத்தரணி எஸ். எல். குணசேகரா நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

கடிதத்தில் உள்ளது பிரேமதாஸா உடுகம்பொலவின் கையொப்பம்தான் என்று அவரது சகோதரரான மேஜர் உடுகம்பொல அடையாளங் காட்டினார் என்று சட்டத்தரணி குணசேகரா குறிப்பிட்டார்.

தமது சார்பில் ஆஜராக சட்டத்தரணி குணசேகராவை நியமிப்பதாகவும் திரு. உடுகம்பொல தமது கடிதத்தில் தெரிவித்திருக்கிறார்.

இதனை ஏற்றுக்கொண்ட மேல் நீதிமன்ற நீதிபதி லெஸ்லி அபயசேகரா, எதிரி இன்றி விசாரணை நடத்தப்படும் என்று உத்தரவிட்டார். அதன் பின்னர் எதிரி மீதான குற்றப்பத்திரிகை அவரது சட்டத்தரணியிடம் கையளிக்கப்பட்டது.

இவ்வழக்கில்—12-03-92 இல் சத்தியப்பிரமாணம் செய்து வெளியிட்ட பிரகடனம் ஒன்றின் மூலம் அரசுக்கு எதிராக மக்களின் குரோதத்தையும் அதிருப்தியையும் தூண்டினார் என்று திரு. உடுகம்பொல மீது அரசு குற்றஞ் சுமத்தியுள்ளது.

விசாரணை எதிர்வரும் ஜூன் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (உ-எ)

# முதலாமிடம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

அனைத்துலக மகளிர் தினத்தையொட்டி யாழ். கல்வித் திணைக்கள மனைப் பொருளியல் பிரிவினரும், மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து நடத்திய "வள்ளூர் வளங்களில் இருந்து உணவு தயாரித்தல்" கண்காட்சியில்—

பாடசாலைகள் மட்டத்தில் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும்—

மனையியற் பயிற்சி நிலையங்கள் மட்டத்தில் சுலாலயாவும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

தனிநபர் பிரிவில் திருமதி மரியநாயகம் என்பவர் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். (ந-5)

# பணத்துடன் சென்றவர் சடலமாக மீட்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வியாபாரத்துக்காகப் பணத்துடன் சென்ற சமயம் காணாமற்போனதாகக் கூறப்படும் வியாபாரி ஒருவரின் சடலம் வவுனியா சுந்தரபுரம் என்னுமிடத்தில் கடந்த திங்களன்று உருக்குலைந்த நிலையில் மீட்கப்பட்டது—

சேமமடு மதுராங்குளத்தைச் சேர்ந்த விஸ்வலிங்கம் இராசரத்தினம் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

கடந்த 3 ஆம் திகதி காலை சுமார் 16 ஆயிரம் ரூபா பணத்துடன் கல்மடு என்ற இடத்துக்குச் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சமயம் இவர் காணாமற்போய் இருந்தார். (இ-5)

# மறுமலர்ச்சிக் கழகத்துக்கும் விடுதலைப் போரில் முக்கிய இடம்

## துணைவேந்தர் பாராட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழினத்தின் விடுதலைப் போரில் முக்கிய இடத்தை மறுமலர்ச்சிக் கழகம் வகித்துள்ளது! வகித்து வருகிறது.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தின் 13வது ஆண்டு நிறைவு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசா கூறினார்.

மன்றத் தலைவர் திரு. த. ஸ்ரீகாந்தன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற விழாவில் பேசிய துணைவேந்தர் மேலும் கூறியதாவது:—

தமிழினம் தனது விடுதலைக்காகக் கிளர்ந்தெழுந்துள்ள இன்றைய நிலையில் மக்களை வழிநடத்தி அவர்களுக்கு விடிவை ஏற்படுத்திக் கொடுக்கும் பொறுப்பு புத்திஜீவிகளுக்கும் பல்கலைக்கழக மாணவருக்கும் உரியது. கல்வியுடன் மட்டுமன்றி கிராமிய மறுமலர்ச்சிக்கும், சமூக மேம்பாட்டுத்துறைக்கும் பல்கலைக்கழக மாணவர்கள் தம்மாலான உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளத் தவறவில்லை. சுதந்திரப் போரின் முக்கிய கருவிகளாக அவர்கள் விளங்கி வருகிறார்கள். மறுமலர்ச்சிக் கழகத்தின் கடந்தகால நிகழ்வுகள் இவற்றை எடுத்துக் காட்டுகின்றன— என்றார்.

திரு ஸ்ரீகாந்தன் தனது தலைமையுரையில் —

அந்நியரின் கட்டுப்பாட்டில் தேசம் சுதந்திரத்தை இழந்து தத்தளித்த வேளையில், பல்கலைக்கழகம் ஊடாக எமது விடுதலையை வென்றெடுக்க ஆரம்பிக்கப்பட்ட இக்கழகம்—

தமிழர் என்ற ரீதியில் இன்றைய ஈழவிடுதலைப் போராட்டத்தில் தோளோடு தோள் சேர்ந்து தொண்டாற்றுகிறது என்று கூறினார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. கரிகாலன் பேசும் போது—

புத்தகத்தினால் செழித்திருக்கும் தமிழினத்தின் விடிவுக்கு மாணவர் சமுதாயம் தமது ஆற்றலைப்பயன்படுத்த வேண்டும். இன்று தென்தமிழீழத்து மக்கள் படும் இன்னல்களை மூடி மறைப்பதில் அரசு முனைகிறது. எமது மக்களைக் கொன்று தமிழர்களின் கலாசாரத்தை அழிப்பதில் இராணுவம் முனைப்புடன் செயல்பட்டுவருகின்றது— என்றார்.

மற்றும் பலரும் அங்கு உரையாற்றினர். இறுதியில் கலைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (ஒ-111)

## நாளை

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த கச்சாய் அம்மன் கோவிலிலும் அல்லாரை இடம்பெயர்ந்தோர் முகாமிலும் நாளை வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி ஏற்றப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-117)

* * *

தென்மராட்சி, மார்ச் 18

போராட்ட வரலாற்றில் மார்ச் மாதத்தில் வீரமரணமடைந்த — கைதடி வட்டத்தைச் சேர்ந்த — மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை கைதடி சந்தியில் நடைபெறும் (உ-17)

# பரீட்சைகள் திகதி மாற்றம்; ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 18

பரீட்சைகள் பல திகதி மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படவிருக்கும் இந்தப் பரீட்சைகள் பின்வரும் காலப்பகுதியில் நடைபெறும் எனப் பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

★ எஸ். எல். ஏ. எஸ். (இலங்கை நிர்வாக சேவை திறந்த / மட்டுப்படுத்தப்பட்ட) பரீட்சை கொழும்பில் மே மாதத்திலிருந்து ஜூன் மாத முற்பகுதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

★ எஸ். எல். ஓ. எஸ். தரம் 11 / கொழும்பில் ஜூன் மாத முற்பகுதியில் நடைபெறும்.

★ தொலைக்கல்வி ஆசிரியர் பரீட்சை (பகுதி 1) ஏப்ரல் 26ஆம், 27ஆம் திகதிகளில் யாழ். மாவட்டத்தின் 10 நிலையங்களில் நடைபெறும்.

★ எஸ். எல். ஏ. எஸ். (இலங்கை நிர்வாக சேவை) தடைதாண்டுப் பரீட்சை கொழும்பில் மே மாதம் 29 ஆம் திகதி நடைபெறும்.

★ ஏ. ஏ. ரி.— ஸ்ரீலங்கா பரீட்சை கொழும்பில் மார்ச் மாதம் 20ஆம், 21ஆம், 27ஆம் திகதிகளில் நடைபெறும் (ஒ)

# வதிவிட வேளாண்மை போட்டி மதிப்பீடு

யாழ்ப்பாணம், மார்ச் 18

வதிவிட வேளாண்மைப் போட்டியில் கலந்து கொள்வோரின் இல்லங்களுக்கு மதிப்பீட்டுக் குழுவினர் இன்று வியாழன் முதல் விஜயம் செய்ய உள்ளனர் என்று யாழ். மாவட்ட தமிழ்ழ பெருந்தோட்ட மேம்பாட்டுக் கழகம் அறிவித்துள்ளது.

போட்டியாளர்களுக்கு புள்ளி வழங்கும் நடவடிக்கை இன்று முதல் 25 ஆம் திகதி வரை மேற்கொள்ளப்படவுள்ளது. (இ)

# ஆயிரத்து 550 நாய்கள் கடந்த வருடம் அழிப்பு!

யாழ்ப்பாணம் மார்ச் 18

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த வருடம் ஆயிரத்து 550 கட்டாக்காலி நாய்கள் மாநகர சபை ஊழியர்களால் பிடித்து அழிக்கப்பட்டன.

இதேவேளை—

யாழ். மாநகரசபை சுகாதாரவைத்திய அதிகாரி பிரிவில் கடந்த ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரு மாதங்களில் மட்டும் 245 பேர் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டனர். அதேசமயம் 40 பேர் விசர் நாயினால் கடியுண்டதாக நம்பப்படுகிறது.

577 கட்டாக்காலி நாய்கள் இவ்விரு மாதங்களிலும் பிடித்து அழித்தொழிக்கப்பட்டன.

கடந்த வருடம் முழுவதும் 3ஆயிரத்து 385 பேர் கட்டாக்காலி நாய்களினால் கடியுண்டனர் என்றும் 639 பேர் விசர் நாயினால் கடியுண்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-162)

# இலங்கை உதவுமாம்

கொழும்பு, மார்ச் 18

பம்பாயில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றிய விசாரணையில் உதவும்படி இந்தியா அழைத்தால் அதனை ஏற்று இலங்கை அரசு ஒத்துழைக்கும்.

பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்க முன்கண்டவாறு தெரிவித்தார். (ஒ-எ)

# இன்டர் போல் அதிகாரிகள் பம்பாய் விரைவு

பம்பாய், மார்ச் 18

பம்பாயில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பாரிய குண்டு வெடிப்புச் சம்பவங்கள் பற்றி இந்திய அதிகாரிகள் நடத்திவரும் விசாரணைக்கு உதவுவதற்காக சர்வதேச பொலிஸ் (இன்டர்போல்) அதிகாரிகள் நேற்று முன்தினம் பம்பாயை வந்தடைந்தனர்.

இதேவேளை அமெரிக்காவில் இருந்து வெடிமருந்து இரசாயன நிபுணர்களும் பம்பாய்க்கு விஜயம் செய்தனர் என அறிவிக்கப்பட்டது. (ஒ எ)

# உருவப்படங்கள்

யாழ்ப்பாணம், மார்ச் 13

பாண்டியூர் சனசமூக நிலையத்தின் ஆரம்ப ஸ்தாபகர்களாகிய அமரர்களான இ. இம்மானுவல், கு அருளப்பு ஆகியோரின் உருவப்படங்கள் கடந்த 5 ஆம் திகதி மேற்படி நிலையத்தில் திரை நீக்கம் செய்துவைக்கப்பட்டன. [க 17]


## நன்றி செலுத்தும் ஆராதனை

**REV. R. J. துரைராஜா**

13-03-93இல் இந்தியாவில் காலமாகிய Rev R. J. துரைராஜாவின் சீவியத்திற்காகவும் ஊழியத்திற்காகவும் நன்றி செலுத்தும் ஆராதனை எதிர்வரும் சனிக்கிழமை (20-03-93) பிற்பகல் 4-00 மணிக்கு "The Haven" Ark Lane, Uduvilஇல் நடைபெறும் என அறியத்தருகிறோம்.

ஆ. சின்னத்தம்பி

உடுவில் (24875)

## வலி கிழக்கு வர்த்தகர் சங்கம்

# பொதுக் கூட்டம்

காலம் : 1993 03 -28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

இடம் : அத்தியார் இந்துக் கல்லூரி மண்டபம் நீர்வேலி.

கோப்பாய் வலயப் பிரதேசத்திற்குள் உள்ள சகல வர்த்தகர்களையும் மிக முக்கிய விடயங்கள் கலந்தாலோசிக்க வேண்டியிருப்பதால் மேற்படி பொதுக்கூட்டத்திற்கு தவறாது சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றோம். தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் கலந்து உரையாற்றுவார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தலைவர் செயலாளர்.

1993 03 - 14 24871)

விழிப்புலன் அற்றோர் அகதிகள் நிதிக்காக
நல்லூர் லயன்ஸ் கழகம்
நடத்தும்

# முத்தமிழ் விழா

நிகழ்ச்சிகள்

1. இசைக் கச்சேரி

பாட்டு : கலாவித்தகர் செல்வி பிரசாந்தி இராமச்சந்திரன்
வயலின் : வித்துவான் ஆர். என். கேசவமூர்த்தி
மிருதங்கம் : கலாவித்தகர் K. கண்ணதாசன்
கடம் : கலாவித்தகர் சதா வேல்மாறன்

2. நடனம்

நாட்டியக் கலைமணி மைதிலி அம்பலவாணர்
நட்டுவாங்கம்: பரத சூடாமணி கிருஷாந்தி ரவீந்திரா
பாட்டு : சங்கீத வித்துவான் வர்ண ராமேஸ்வரன்
மிருதங்கம் : மிருதங்க கலா வித்தகர் க. கண்ணதாசன்
வயலின் : சங்கீத வித்துவான் R.S. கேசவமூர்த்தி

3. நாடகம்

இலங்கை வேந்தன் பங்குபற்றும்
அராலியூர் ந சுந்தரம்பிள்ளையின்
மேடை நாடகம்

**[போர் முரசு கேட்கிறது]**

இடம் : பரியோவான் கல்லூரி
காலம்: 18-3-93 இன்று வியாழன் பி. ப 3 மணி — 6 மணி

விளம்பர அன்பளிப்பு:-

விக்னேஸ் ரேட் சென்றர்
923, நல்லூர் மார்க்கட்
கல்வியங்காடு — யாழ்ப்பாணம்.
(சி 4696)


## புறநிலைப் படிப்புகள் அலகு

## யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகு பின்வரும் தலைப்புகளில் பொது விரிவுரைத் தொடர்களையும், கற்கை நெறிகளையும் நடப்பாண்டில் நடாத்தவுள்ளது. வார இறுதி நாட்களில், பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள இவ் வகுப்புக்களில் பங்குகொள்வோருக்கு கல்வித் தகைமைச் சான்றிதழ் எதுவும் தேவையில்லை. ஆர்வலர்கள் எவரும் தமது முகவரியுடன் கூடிய முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட, அனைத்து விவரங்களையும் கொண்ட விண்ணப்பப்படிவம் மூலம் கற்கை நெறியின் தலைப்பைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

1. பொது விரிவுரைகள்
   - 1.1 உணவும் ஊட்டச்சத்தும் (Food and Nutrition)
   - 1.2 தற்கால அனைத்துலக விவகாரங்கள் Contemporary International Affairs
   - 1.3 ஈழத்தில் தமிழர் வரலாறு (The Histoty of Tamils in Sri Lanka)
2. கற்கை நெறிகள் (குறைந்தது 36 மணித்தியாலங்கள்/நான்கு வாரம்)
   - 2.1 சிறுதொழில் முயற்சிகள் (Enterpreneurships and small Business)
   - 2.2 தற்சார்புக் கிராமிய அபிவிருத்தி (Rural Development and Self Reliance)
   - 2.3 செயல்திட்ட செயல்முறைகள் (Project Planning Process)
   - 2.4 பெண்களும் அபிவிருத்தியும் (Women and Development)
   - 2.5 பத்திரிகைக் கலை (Journalism)
   - 2.6 உளவளத்துணை ஓர் அறிமுகம் Introduction to Counselling)
   - 2.7 வானியலும் சோதிடக்கலையும் (Astronomy and Astrology)
   - 2.8 ஈழத்தில் நவீன தமிழ் ஆக்க இலக்கியங்கள் (Modern creative Tamil Literature in Sri Lanka
   - 2.9 தற்கால அரங்கியலும் நாடகமும் (Contemporary Drama and Theatre)

**புலமை வளத்தினர் (Resource Persons)**

மேற்படி தலைப்புக்களில் நடைபெறவுள்ள கற்கை நெறிகளில் புலமை வளத்தினராகப் பணியாற்ற விரும்பும் பல்கலைக்கழகத்திற்கு வெளியேயுள்ள புலமை சான்றோர் தங்கள் தகைமை விவரங்களைக் குறிப்பிட்டு புறநிலைப்படிப்புகள் அலகிற்கு விண்ணப்பிக்கவும்.

- பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

திகதி:- 6-03-1993.
புறநிலைப்படிப்புகள் அலகு,
யாழ்ப்பாணம். (சி/4694)

# 76ஆவது 'பொன் அணிகள் போர்' (BATTLE OF THE GOLDS) இன்றும், நாளையும் வட்டுக்கோட்டையில்

யாழ்ப்பாணம், மார்ச் 18 வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கும் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் இடையிலான 76-ஆவது வருடாந்த 'பொன் அணிகள் போர்'' கிரிக்கெட் ஆட்டம் இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை ''பிக்நெல்'' மைதானத்தில் நடைபெறுகிறது.

இன்று காலை 10 மணி முதல் மாலை 5-30 மணி வரையும், நாளை காலை 9-00 மணி முதல் மாலை 5-00 மணி வரை இந்தக் கிரிக்கெட் போர் நிகழ்வு இடம்பெறும்.

பெரும் எண்ணிக்கையான கிரிக்கெட் ரசிகர்கள் இந்த ஆட்டத்தைக் கண்டுகளிப்பதற்காக இன்றும் நாளையும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் கூடுவர் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

யாழ். கிரிக்கெட் மத்தியஸ்தர் சங்கம் அங்கத்தவர்கள் இன்றைய ஆட்டத்துக்கு மத்தியஸ்தம் வகிப்பர்.

**யாழ்ப்பாண கல்லூரி அணி**

யாழ்ப்பாணக் கல்லூரி அணியில் இடம்பெறுவோர் விவரம்:-

இருப்பவர்கள் இடமிருந்து வலம்:- திரு ரி. நித்தியரட்ணம் (பயிற்சியாளர்), கே. வரதப்பன், ரி. வீரசுதன் (கடந்த வருட அணித் தலைவர்), எஸ். அஜித் (அணித் தலைவர்), வண கலாநிதி எஸ். ஜெபநேசன் (அதிபர்), எஸ். சஞ்சயன் (உதவித்தலைவர்), எஸ். ஜே. பீற்றர், திரு. ஏ. ஜெயராஜன் (உடற் கல்விப் பொறுப்பாசிரியர்.

நிற்பவர்கள் இடமிருந்து வலம்: எஸ். சிவகரன், எஸ். சுஜன் கே. கோணேசன், எம். சுஜீவ், ஆர். ஸ்ரீதரன், ஆர். மதியழகன், எஸ். சிவதரன், என். பரணிதரன், எஸ். ஜனந்தன், எஸ் ராஜன்.

**சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி**

சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி விவரம்:

இருப்பவர்கள் இடமிருந்து வலம்: ஆர். பிரஸாத், திரு. எஸ். எவ். சேவியர் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர் பி. எரிக் நிமலன் (அணித் தலைவர்), வண. பிதா. ஏ ஐ. பேர்னாட் (அதிபர்), ஏ. அன்ரனி மக்ஸி (உதவித் தலைவர்), திரு. எஸ். சகாயராஜா பொறுப்பாசிரியர்), ஜே. ஜ ஈ ஏர்பன் (கடந்த வருட அணித் தலைவர்)

நிற்பவர்கள் (நடு வரிசை) இடமிருந்து வலம்: பி. தர்மேந்திரா, ஜே. தேவானந்த, ஏ. எஸ். நிஷாந்தன், என். தேஸ்குமார், கே. பிரதிபன், என். ஆர். மகேந்திரராஜா, பி. பாலகுமார், கே. வசந்தகுமார்.

நிற்பவர்கள் (பின் வரிசை) இடமிருந்து வலம்: ஏ. ஜ. லோயாலா, எஸ். ரஞ்சித், ஆர் றோஷான, டபிள்யூ. ஜ ஏட் நிஸங்க, பி திலிப்குமார்.



யாழ்ப்பாணக் கல்லூரி அணி



சென். பற்றிக்ஸ் அணி

## இன்றைய உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 18 நாவாந்துறை சென் மேரிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் — 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான—விலகல் முறை உதைபந்தாட்டப் போட்டித் தொடர் இன்று பிற்பகல் 3 மணிக்கு நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

இன்றைய ஆட்டங்களில் நாவாந்துறை சென். நிக்கிலஸ் வி. க. அணியை எதிர்த்து ஜோன் கெனடி வி. க. அணியும், அறிவொளி வி. க. அணியை எதிர்த்து சுன்னாகம் மயிலங்காடு ஞானகலா அணியும் மோதவிருக்கின்றன.

(உ)

## வித்தியாலய பவள விழா

யாழ்ப்பாணம் மார்ச் 18 மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தின் நிறுவனர் தினமும், பவள விழாவும், பரிசளிப்பு விழாவும் கடந்த 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிபர் திரு செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில், ''75 ஆண்டுகளுக்கு முன் வித்துவான் இராமலிங்கம் இவ் வித்தியாலயத்தை தாபித்து பல்வேறு கஷ்டங்கள் மத்தியில் அதை முன்னேறச் செய்தார்'' என்று கூறினார்

தென்மராட்சிக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தமிழ் கல்வி மேம்பாட்டுப் பேரவைப் பொறுப்பாளர் திரு வெ. இளங்குமரன், சாவகச்சேரி வ சேட ஆணையாளர் திரு த. நவரத்தினராசா திரு. இ நடராசா, கொத்தணி அதிபர் திரு. அ. பொ செல்லையா ஆகியோரும் விழாவில் உரையாற்றினார்கள்

(க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனையாகின்றன

எம்மிடம் தெய்வீக நூல்கள், பாடசாலைப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள் ஸ்ரீமுக வருஷ இரகுநாதையர் வாக்கிய பஞ்சாங்கம் ஆகியன விற்பனையாகின்றன. சோதிட விலாச புத்தகசாலை, 46, பெரியகடை, யாழ்ப்பாணம், சோதிட பிரகாச இயந்திரசாலை, கொக்குவில். (6049)

### தேவை

நல்ல ஆங்கில அறிவுள்ள Accounts, Typing தெரிந்த பெண் லிகிதர் தேவை. நற்சான்றுப் பத்திரத்துடன் தொடர்பு கொள்ளவும்: கு. வி. அச்சகம், புத்தக வெளியீடுகள் விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6053)

### றோனியோ - பிரதி

குறித்த தவணையில் தரமான முறையில் றோனியோ பிரதி செய்து கொடுக்கப்படுகிறது. 100 பேப்பர் இரண்டு பக்கம் றோனியோ செய்வதற்கு 30/- ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது அறிவகம் புத்தகசாலை, 374, வெலிங்டன் சந்திக்கு அருகில், யாழ்ப்பாணம். (சி 4716)

### திருத்தவேலைகள்

கடிகாரங்கள் திருத்துதல் வேலைகள் உத்தரவாதத்துடன் தொடர்ச்சியாக மேற்கொள்கிறோம் என்பதை மகிழ்ச்சியுடன் ''அல்டி'' நிறுவனம் தெரிவித்துக் கொள்கின்றது. (சி-4712)

மணிக்கூடுகள், சுவர்க்கடிகாரங்கள், எலக்ரோனிக் கடிகாரங்கள் எதுவானாலும் உங்கள் மனத்திருப்திக்கு ஏற்ற வகையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொடுக்கப்படும். பழைய மணிக்கூடுகள் வாங்கவும், விற்கவும் தொடர்பு: தியாகர் வாச்வேக்ஸ், 406, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [பஸ் நிலைய முன்பாக] (2487ப)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப்பட்ட முறையிலும், வீடுகளிலும் கற்பிக்கப்படும். 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (6055)

### தவறிவிட்டது

பே ரஞ்சநாதன் ஆகிய எனது கைக்கடிகாரம் யாழ் பஸ் நிலையப் பகுதியில் தவறி விட்டது. கண்டெடுத்தவர் காலதாமதமின்றி, பெரியாஸ்பத்திரிக்கு முன்பாக), யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கவும் (6058)

### இயற்கை நுளம்புத்திரி

நோய் பல பரவிட நுளம்பே காரணம் இயற்கைச்சாதனம் கொண்டு தயாரான நுளம்புத்திரி த்தொரு ''மில்கைற்'' தயாரிப்பு. பாவித்துப் பயன் காணுங்கள். தற்போது விற்பனையாகிறது மில்க்கைற். (சி-4693)

---

இடம் பெயர்ந்தவர்களுக்கு

# ஒன்றிணைந்த உதவித் திட்டம்; மதிப்பீட்டு படிவம் விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து முகாம்களிலும், வேறு இடங்களிலும் தங்கியுள்ள மக்களுக்கான ஒன்றிணைக்கப்பட்ட உதவித் திட்டத்தின் கீழ் புதிய நிவாரண மதிப்பீட்டுப் படிவங்கள் தற்போது விநியோகிக்கப்பட்டு வருகின்றன. இவற்றைப் பதிவு செய்யும் வேலைகள் உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

இந்தப் படிவங்களில் கொடுக்கப்படும் விவரங்களின் அடிப்படையிலேயே எதிர்வரும் ஏப்ரலில் இருந்து இடம்பெயர்ந்தவர்களுக்கு நிவாரணத்துக்கான உணவுப் பொருள்கள் வழங்கப்படும். இதற்கெனப் புதிய உணவு முத்திரைகளும் வழங்கப்படும்.

ஒன்றிணைக்கப்பட்ட இப் புதிய திட்டத்தின் கீழ் மீளக் குடியமர்வு, உற்பத்தி முயற்சி நன்கொடை, கடுமையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈடு, வீடமைப்பு நன்கொடைக் கடன், கைத்தொழில் கடன், சிறுமுயற்சிக் கடன் ஆகியவை வழங்கப்படும். (த 175-17)

## டாக்டர் சுகந்தன் மறைவு தமிழ் மக்களுக்குப் பேரிழப்பு

### வைத்திய அதிகாரி இரங்கலுரை

யாழ்ப்பாணம், மார்ச் 18

''டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியின் திடீர்மறைவு சித்த வைத்திய உலகிற்கும், தமிழ் மக்களுக்கும் பேரிழப்பாகும்''

அகில இலங்கை உள்ளூராட்சி சேவை சித்த வைத்திய அதிகாரிகள் சங்கக் கூட்டத்தில் இரங்கல் உரை நிகழ்த்துகையில் சங்கத்தின் இணைச் செயலாளரும் வேலணைப் பிரதேச சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரியுமான பொ. சண்முகரத்தினம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். யாழ். மாநகரசபை வைத்தியசாலை மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

அவர் மேலும் பேசுகையில், டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தமது வைத்திய சேவை மூலமும், சமூக சேவை மூலமும் இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் மக்களுக்குப் பெரும் சேவையைப் புரிந்துள்ளார் என்று கூறினார். இக்கூட்டத்தில் நிர்வாக சபை உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

### மாகாணசபைத் தேர்தல்:

## பல முதலமைச்சர்களுக்கு இம்முறை இடமில்லை

கொழும்பு, மார்ச் 18

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களில் மீண்டும் போட்டியிட பெரும்பாலான முதலமைச்சர்களுக்கு அனுமதி வழங்குவதில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைப் பீடம் தீர்மானித்துள்ளது.

சில வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''சண்டே ஐலண்ட்'' இத்தகவலை வெளியிட்டது.

சில முதலமைச்சர்கள் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதாகவும்—

வேறு சிலர் லலித்—காமினி தலைமையிலான ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணி தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதுமே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது (உ-எ)


குமரன் விளையாட்டுக் கழகம் நடத்தும்

**கரம் சுற்றுப் போட்டிகள்**

மேற்படி ஆட்டங்களில் பங்குகொள்ள விரும்புவோர் தமது பெயர்களை ''பிள்ளையார் எலக்ரிக்கல்ஸ்''இல் பதிவு செய்யவும்.

பலாலி றோட், கோண்டாவில் கிழக்கு
(கோண்டாவில் சந்தி)

முடிவு திகதி: 25 - 03 - 1993

(6056)



வடபிராந்திய யாழ்.

**ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம்**

**முக்கிய அறிவித்தல்**

கொழும்பு அல்லது வவுனியாவிலிருந்து ஆங்கில மருந்துகள் கொண்டுவரும் சகல வழி வியாபாரிகளிடமிருந்து மருந்துகள் கொள்வனவு செய்யவேண்டாமென சகல அங்கத்தவர்களுக்கும் மருந்து கொள்வனவு செய்யும் ஏனைய வர்த்தகர்களுக்கும் அறியத் தருகின்றோம்.

மு குறிப்பு: வழி வியாபாரிகள் மருந்து கொண்டுவந்து விநியோகம் செய்வதாயின் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

நன்றி:

க. மு பத்மநாதன்,
கௌரவ செயலாளர்.

(6057)


## பண்டிதமணி நினைவுப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச் 18

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை பிறந்த தின, நினைவு தின நிகழ்வுகளாகப் பாடசாலை மாணவர்களிடையே பேச்சுப்போட்டியும், பாடசாலை மாணவர் அல்லாதவரிடையே கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளன. (க)


**திரு ரியூசன் சென்ரர்**

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

**A/L 92**

மாணவர்களுக்கான

**வினா - விடை வகுப்பு**

நடைபெறுகின்றன.

வர்த்தகம் — தேவா
இந்து நாகரிகம் — சோதி
புவியியல் — வேலா
தமிழ் — குழந்தை

(சி-4709)



**இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி**



**அமரர் பொன்னையா சுந்தரம்**

தோற்றம்: 01 — 09 — 1934
மறைவு: 10 — 04 — 1991

அன்பின் சின்னமாய், பண்பின் பிறப்பிடமாய், எம் எல்லோருக்கும் நல்லவராய் வாழ்ந்து, எங்கள் குடும்ப விளக்காய் ஒளிதந்து, எம் இதயங்களை ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனடி சேர்ந்த எம் ஆருயிர் தந்தையே! இன்றுடன் நீங்கள் மறைந்து ஈராண்டு சென்றாலும், உங்கள் அன்பு நினைவலைகள் இன்றும் எங்கள் இதயத்தில் ஒளிவிளக்காக இருக்கின்றது தங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, மக்கள், மருமகன்,
பேரப்பிள்ளைகள்.

கோகுலம் வீதி,
கோண்டாவில் வடக்கு. (24852)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மாகாண சபைகள்

தென்னிலங்கையில் இயங்கிய ஏழு மாகாண சபைகளும் கலைக்கப்பட்டுவிட்டன. அவற்றுக்குத் தேர்தல் நடத்துவதற்காகவே அவை கலைக்கப்பட்டதாக எவரும் நினைப்பர். ஆனால் மாகாண சபைத் தேர்தல்கள் நடக்குமா என்ற சந்தேகம் அரசியல் அவதானிகளால் எழுப்பப்படுகிறது.

மாகாணசபைத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கத்துக்கு உள்ளார்ந்த விருப்பமில்லை. தெற்கில் புதிதாகத் தோன்றியுள்ள அரசியல் சூழ்நிலை மாகாண சபைத் தேர்தலில் அரசாங்கக்கட்சி தோல்வியடையக் கூடிய சாத்தியத்தை அதிகரித்துள்ளது.

எனவே வேண்டாத சோதனையில் ஈடுபட்டு ஜனாதிபதி, பொதுத் தேர்தல்களிலும் மண் கவ்வும் நிலையை தோற்றுவித்து விடக்கூடாது என்பது அரச தரப்பினரின் கருத்து நிலைப்பாடு.

மாகாண சபைத் தேர்தல்கள் நடக்குமா என்ற சந்தேக இருள் கவிந்து வரும் அதே சமயத்தில், அவற்றை அடியோடு ஒழித்துவிடும் திட்டம் ஒன்றும் கருக்கொண்டு வருகிறது. நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தரப்பில் உள்ள சிலரின் ஆதரவைப் பெற்று, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன், மாகாணசபைகள் முறையை ஒழித்துவிடுவதற்கு திட்டமிடப்படுவதாகத் தகவல்கள் வெளிவந்துள்ளன.

இனப்பிரச்சினைக்குரிய தீர்வைக் கண்டறிய நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிலும் மாகாண சபைகளை ஒழிப்பது குறித்து ஆராயப்பட உள்ளது. தெரிவுக்குழு நியமிக்க வேண்டும் என்று பிரேரணை கொண்டு வந்த சுதந்திரக் கட்சி எம். பியான மங்கள முனசிங்கவையே பொறிக்குள் விழுத்தி அதன் தலைவராக்கி நாடகம் நடத்திக் காட்டிக் கொண்டிருக்கிறார் பிரேமதாசா! அதே போல, சுகட்சி எம் பியான குணவர்த்தனா மாகாண சபையை ஒழிக்க வேண்டும் என்று கொண்டு வந்த யோசனையைப் பயன்படுத்தி மாகாணசபைத் தேர்தலில் இருந்து தப்பிவிட ஜனாதிபதி முயற்சிக்கிறார்.

மொத்தத்தில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென பெரும் "ஆலாபரணம்" செய்து உருவாக்கப்பட்ட மாகாண சபைகளையும், வடக்கு-கிழக்கு இணைப்பையும் முற்றாக இல்லாமற் செய்து சிங்கள மக்களின் அசைக்க முடியாத அபிமானத் தலைவராக வருவதற்கு பிரேமதாசா முனைகிறார்.

மாகாண சபைகள், வடக்கு-கிழக்கு இணைப்பு ஆகிய இரண்டையும் கொண்டு வருவதில் தீவிரமாக இருந்த இந்தியா இவற்றைப் பார்த்து கைகட்டி மௌனமாக நிற்கிறது. அதனைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டு ஸ்ரீலங்கா ஜனாதிபதி துள்ளிக் குதிக்கப் போகிறார்!

நாட்டின் முதன்மைப் பிரச்சினையான தமிழர் விவகாரத்தை ஓரங்கட்டி விட்டு, தென்னிலங்கைத் தலைவர்கள் தமது அரசியல் மேபாட்டிலும், பதவி ஏறுவதிலும் கவனம் செலுத்தப் போவதால் வடக்கு-கிழக்கில் இராணுவமே அரசின் இடத்தை நிரப்புவதற்குத் தீவிரமாக முயற்சிக்கும் என்பதை எதிர்பார்க்கலாம்.

யுத்த நடவடிக்கைகளைப் பாதிக்காத வகையில்

# அவசர காலச் சட்ட விதிகளை இடைநிறுத்த அரசு யோசனை

கொழும்பு, மார்ச் 17

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்கு விதிகளை ரத்துச் செய்வது அல்லது இடைநிறுத்தி வைப்பது பற்றிய யோசனை ஒன்றை அமுல் செய்வது குறித்து அரசாங்கம் தீவிரமாகப் பரிசீலித்து வருகின்றது.

உயர்நிலை வட்டாரங்களை மேற்கோள்காட்டி "சண்டே ரைம்ஸ்" இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு இராணுவ நடவடிக்கைகளைப் பாதிக்காத வண்ணம் இந்த யோசனையை அமுல் நடத்துவது பற்றி கூடுதல் கவனம் செலுத்தப்பட்டு வருவதாக உயர்நிலைப் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் இல்லாதவிடத்து, வடக்கு - கிழக்கில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை அமுல் நடத்த முடியும் என பாதுகாப்பு வட்டாரங்களில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

எனினும் —

பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு போதிய அதிகாரங்களை பாதுகாப்புப் படையினருக்கு வழங்கவில்லை என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் முற்றாக ரத்துச் செய்யப்படுமிடத்து, பொது ஜனப் பாதுகாப்புச் சட்டத்தின் மூன்றாவது பிரிவு அமுல் நடத்தப்பட முடியும்.

சந்தேக நபர்களைக் கைது செய்வதற்கு இந்தப் பிரிவு இராணுவத்தினருக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குகின்றது.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பெரும்பாலான ஒழுங்கு விதிகளை சாதாரண சட்டத்தின் கீழ் தனிச் சட்டங்களாக கொண்டு வர முடியும் என்று கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் ஆய்வு நிலையம் அரசுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

அவசரகாலச் சட்டத்தை நீக்கும்போது தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலை என்னவாகும் என்பது பற்றி அரசு விசேட கவனத்துக்கு எடுத்துக்கொண்டது.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ள சுமார் 4 ஆயிரம் பேரில் 3 ஆயிரம் பேர் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்றும்—

ஆயிரம் பேர் மீது நீதிமன்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ-எ]

மேல்மாகாண சபையில்

## முதலமைச்சர் நியமனத்தில் கட்சிகள் தீவிர கவனம்

### லலித்தும் போட்டியிடுவார்

கொழும்பு, மார்ச் 18

மேல் மாகாணசபைத் தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கு யாரை நிறுத்துவது என்பதிலேயே முக்கிய அரசியல் கட்சிகள் கவனத்தைச் செலுத்துகின்றன என அறிவிக்கப்படுகின்றது.

தற்போதைய முதலமைச்சரான சுசில் முனசிங்காவை மீண்டும் நிறுத்துவது என்று ஐக்கிய தேசியக் கட்சி பெரும்பாலும் முடிவு செய்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சுதந்திரக்கட்சி தலைமையில் அமைக்கப்பட்ட பொது மக்கள் முன்னணியின் சார்பில், கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியான கிங்ஸ்லி விக்கிரமரத்தினாவை நிறுத்துவது என்று முடிவாகியுள்ளதாம்.

இதே வேளை —

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் அதன் தலைவரான முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவார் என்று முன்னணி வட்டாரங்கள் கூறின. (ஒ-எ)

### பிரேமச்சந்திரா முதலமைசர் பதவிக்கு

கொழும்பு, மார்ச் 18

வடமேற்கு மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் தற்போதைய முதலமைச்சரான கரமினி ஜயவிக்கிரம பெரேரா போட்டியிடமாட்டார் என்றும்—

அவருக்கு மத்திய அமைச்சர் பதவி வழங்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை- இம்மாகாணத்தில் முதலமைச்சர் பதவிக்கு ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் ஜி. எம் பிரேமச்சந்திரா நிறுத்கப்படுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ எ)

மேல்மாகாணசபை நிகழ்ச்சி நிரலில்

## சமஷ்டி அரசமைப்பு முறை பிரேரணை நீக்கப்பட்டது

கொழும்பு, மார்ச் 18

இரு சபைகள் கொண்ட சமஷ்டி அரசமைப்பு முறையைக் கொண்டு வரும்படி அரசாங்கத்தைக் கோரும் பிரேரணை ஒன்றை மேல் மாகாணசபை தனது நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கி விட்டது.

இப் பிரேரணையை லிபரல் கட்சி உறுப்பினர் டி. ஏ. பி வீரரத்னா சமர்ப்பித்திருந்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் ஒருவர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சினையைத் தொடர்ந்து இப்பிரேரணையை கூட்ட நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்கும்படி மாகாண சபையின் அவைத் தலைவர் திருமதி குலசீலி பெரேரா உத்தரவிட்டார்.

இலங்கையின் அரசமைப்புச் சட்டம் மற்றும் சபையின் நிலையியற் கட்டளைகள் ஆகியவற்றின்படி இது போன்ற பிரேரணையை சபையினால் விவாதிக்க முடியாது என்று ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பிய திரு. டைட்டஸ் விமலசிறி தெரிவித்தார். (ஒ-எ)

ஜனாதிபதித் தேர்தல் வழக்கு:

## பிரேமாவுக்கு நஷ்டஈடு: சிறிமாவோ மேன்முறையீடு

கொழும்பு, மார்ச் 18

தள்ளுபடி செய்யப்பட்ட ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப மனு தொடர்பாக முதலாவது பிரதிவாதியான ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கு 17 லட்சத்து 12 ஆயிரத்து 917 ரூபாவை வழக்குச் செலவாகக் கொடுக்கும்படி, எதிர்க் கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு உயர் நீதிமன்றப் பதிவாளர் விடுத்த தீர்ப்பை ஆட்சேபித்து உயர்நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்படவுள்ளது.

திருமதி பண்டாரநாயக்காவின் சட்டத்தரணி நிமால் சிறிபால டி சில்வா இத்தகவலை வெளியிட்டார்

இவ்வளவு பெருந் தொகையான பணத்தை செலவு தொகையாக வழங்கும்படி உத்தரவிட சட்ட விதிகள் இடையா என்றும் அவர் கூறியுள்ளார்.

இன்னொரு பிரதிவாதியான தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வாவுக்கு 2 லட்சத்து 20 ஆயிரத்து 200 ரூபா வழங்கும்படியும் திருமதி பண்டாரநாயக்காவுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ-எ)

### சங்குப்பிட்டிக்கு வந்த படையினர்

தென்மராட்சி, மார்ச் 18

செவ்வாய் காலை 5.30 மணிக்கு சங்குப்பிட்டி பாலம் வரை நடந்து வந்த படையினர் அப்பகுதிக் கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த படகுகள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்

படகிலிருந்த மீனவர்கள் கடலில் பாய்ந்து நீந்திக் கரை சேர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

### செத்தல் மிளகாய் விலையில் வீழ்ச்சி

கோப்பாய், மார்ச் 18

சந்தைக்கு பெருமளவில் செத்தல் மிளகாய் வரத் தொடங்கியதை அடுத்து செத்தல் மிளகாயின் விலை கிலோ 90 ரூபாவாக குறைந்துள்ளது. (ஒ-72)

### இன்று

வடபிரதேச நலனொழுக்க சம்மேளனத்தினரின் கிராம மட்டத் தலைவர்களுக்கான உளவியல் கருத்தரங்கு சம்மேளனப் பணிமனையில் இன்று காலை 10 மணிக்கு நடைபெறும். (உ-152)

### பாடசாலைகளில்

நவாலி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பி. ப. 1.30 மணிக்கு கொத்தணி அதிபர் திரு. ஐ. மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஒ-161-90)

o o o

நீர்வேலி, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு, பாடசாலை மைதானத்தில் அதிபர் திரு. செ. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும். (ஒ-110)

o o o

நீர்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு பாடசாலை அதிபர் திரு. ராஜா தலைமையில் நடைபெறும். (ஒ-72)

o o o

கொடிகாமம் அரசினர் வித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-117)

o o o

சங்குவேலி அ.த.க பாடசாலை மெய்வல்லுநர்போட்டிகள் நாளை பிற்பகல் 3 மணிக்கு அதிபர் திரு. செ. செல்வராசா தலைமையில் நடைபெறவுள்ளன. (உ-152)

o o o

சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை பிற்பகல் 1. 30 மணிக்கு அதிபர் திரு. எஸ். சிவனேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. [உ-99]

o o o

மாவிட்டபுரம் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 1 30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [உ-90]

o o o

சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி இல்ல மெய்வல்லுனர் போட்டி இன்று பிற்பகல் 2 மணிக்கு — சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில்— அதிபர் திரு. க சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-117)

o o o

வரணி காம்பைக்குறிச்சி கனிஷ்ட இடைநிலைப் பாடசாலை இல்ல விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. வி. குமாரசாமி தலைமையில் நடைபெறும் (உ-1.7)

o o o

உடுவில், மார்ச் 18

இணுவில் சைவப்பிரகாச மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 1-30 மணிக்கு அதிபர் திரு. க தம்பித்துரை தலைமையில் நடைபெறவுள்ளது.

o o o

சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு ம சபாரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ 117)

### வலைகளை பறிகொடுத்த மீனவர்கள்

சுழிபுரம், மார்ச் 18

சுழிபுரம் மீனவர்கள் இருவர் ஸ்ரீலங்காப்படையினரிடம் தமது 50 ஆயிரம் ரூபா பெறுமதியான வலைகளைப் பறிகொடுத்தனர்.

காரைநகர் கோவளம் பகுதியில் உள்ள கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது. (இ-28)

### உடுவிலில் மூளை மலேரியா

தெல்லிப்பழை, மார்ச் 18

உடுவில் சுகாதாரப் பிரிவில் மூளை மலேரியா காய்ச்சல் பரவி வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுந்தரோடை, புதுமடம், இக்கிராமை, பருத்தியோலைப் பகுதிகளில் ஆறு பேருக்கு மூளைக் காய்ச்சலும் மேலும் 12 பேருக்கு மலேரியாக் காய்ச்சலும் பரவி இருப்பதாகவும் —

இவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுவரும் அதேசமயம், மேலும் நோய் பரவாமல் தடுக்க வேண்டிய நடவடிக்கைகளில் உடுவில் சுகாதாரப் பிரிவினர் இறங்கியுள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (ஒ-68)

### காங்கிரஸ் நேற்றும் வெளிநடப்பு

சென்னை, மார்ச் 18

தமிழ்நாடு சட்டசபையில் இருந்து இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் நேற்றும் வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று முன்தினம் சபையில் பாபர்மசூதி பிரச்சினை குறித்து அ. தி. மு. க. உறுப்பினர்கள் மற்றும் முதலமைச்சர் ஆகியோர் நிகழ்த்திய உரைகளை சபைக் குறிப்பில் இருந்து நீக்கும்படி கோரி எதிர்க்கட்சித் தலைவர் எஸ் ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று ஒழுங்குப் பிரச்சினை கிளப்பினார்.

அதனை சபாநாயகர் நிராகரித்தார்.

அதனை ஆட்சேபித்தே இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர். (இ-எ)

### அமைச்சரவைத் தீர்மானம்

கொழும்பு, மார்ச் 18

பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில், தந்தையின் தொழில் எது என்பதைக் குறிக்கும் பிரிவை (கலத்தை) அகற்றி விடுவது என்று அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சட்டத் திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்படி அமைச்சர் பெஸ்டஸ் பெரேராவை அமைச்சரவை கேட்டுக் கொண்டுள்ளது.

### ஐ. தே. க. செயற்குழுவின் விசேட கூட்டம்

கொழும்பு, மார்ச் 8

ஐக்கிய தேசியக் கட்சிச் செயற்குழுவின் விசேட கூட்டம் இம்மாதம் 26ஆம் திகதி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீகோதாவில் நடைபெறவுள்ள இக்கூட்டத்துக்கு ஜனாதிபதி பிரேமதாஸா தலைமை வகிப்பார் (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா தலைமையில் ஊழல் அரசு ஆட்சியில்!

## வாழப்பாடி கடும் கண்டனம்

சென்னை, மார்ச் 18

முதலமைச்சர் ஜெயலலிதாவையும் அவரது அமைச்சர்களையும் மிகவும் கடுமையாகத் தாக்கி தமிழ் நாடு காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. வாழப்பாடி இராமமூர்த்தி நேற்று அறிக்கை ஒன்றை விடுத்தார்.

முதலமைச்சர் முதல் அனைத்து அமைச்சர்கள் வரை ஊழல் பணப்பெட்டிகளை இரவு நேரங்களில் தாராளமாகப் பரிமாறிக் கொள்கிறார்கள்.

அ.தி.மு.க. ஆட்சியில் கையூட்டு என்பது ஒரு கலையாகி விட்டது. நடைமுறைக்கு ஒவ்வாத மாயாஜாலப் பேச்சுக்கள் அ.தி.மு.க. ஆட்சியில் மலிந்து விட்டன.

பொலீஸ்துறை அ.தி.மு.க. ஆட்சியின் கைப்பாவை ஆகி விட்டது.

மக்களின் நம்பிக்கையை ஜெயலலிதா அரசு இழந்து விட்டது. அரசு செயலகங்கள் செயலிழந்து விட்டன.

— இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

## பழனியில் தனித்துப் போட்டியிட

# ஜெயலலிதா விடுத்த சவால் இந்திரா காங்கிரஸ் ஏற்றது

சென்னை, மார்ச் 18

பழனி நாடாளுமன்றத் தொகுதியில் தனித்துப்போட்டியிடத் தயாரா என்று முதலமைச்சர் செல்வி ஜெயலிதா தமிழக சட்டசபைக் கூட்டத்தில் விடுத்த சவாலை இந்திரா காங்கிரஸ் கட்சி ஏற்றுள்ளது.

வரவுசெலவுத் திட்ட விவாதத்தின் இறுதிக் கட்டத்தில் காங்கிரஸ் உறுப்பினர் திரு. கிருஷ்ணன் பேசும்போது, முதலமைச்சர் குறுக்கிட்டு இந்தச் சவாலை விடுத்தார்.

இச்சவாலுக்கு பதிலளித்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள், பழனி தேர்தலில் தனித்துப் போட்டியிட காங்கிரஸ் தயாராக இருப்பதாகக் கூறினர். (இ-ா)

## பாண்டிச்சேரியில்

# காங்கிரஸ் அரசு வென்றது நம்பிக்கை வாக்கெடுப்பில்!

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச இந்திரா காங்கிரஸ் அரசு நம்பிக்கைத் தீர்மானத்தில் வெற்றியீட்டியது.

சட்டசபையில் நேற்று காங்கிரஸ் அரசு கொண்டு வந்த நம்பிக்கைப் பிரேரணைக்கு ஆதரவாக 17 வாக்குகளும் எதிராக 8 வாக்குகளும் கிடைத்தன.

காங்கிரஸின் 14 உறுப்பினர்களுடன் சேர்ந்து 3 சுயேச்சை உறுப்பினர்களும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

எதிராக 4 அ.தி.மு.க உறுப்பினர்களும் மார்க்ஸிய கம்யூனிஸ்ட் மற்றும் ஜனதாதள் ஆகியவற்றைச் சேர்ந்த தலா ஒவ்வொரு உறுப்பினரும் வாக்களித்தனர்.

நான்கு தி.மு.க உறுப்பினர்கள் வாக்கெடுப்பின் போது சபையில் இருக்கவில்லை.

காங்கிரஸ் — அ.தி.மு.க. கூட்டணி முறிவடைந்ததாக அ.தி.மு.க. அறிவித்ததைத் தொடர்ந்து, பாண்டிச்சேரி காங்கிரஸ் அரசு பெரும்பான்மையை இழந்து விட்டதாகவும்—

அதனால் அரசு தனக்குள்ள பெரும்பான்மையை சபையில் நிரூபிக்கவேண்டும் என்றும் பாண்டிச்சேரி அ.தி.மு.க சட்டசபைக்குழு மாநில ஆளுநரைக் கோரியிருந்தது.

அதனைத் தொடர்ந்தே காங்கிரஸ் அரசு இந்த நம்பிக்கைப் பிரேரணையைக் கொண்டு வந்தது. (உ-எ)

## கொடியேற்றம்

யாழ். திருவண்ணை நகர் வைத்தீஸ்வர சுவாமி கோவிலில் (யாழ். சிவன் கோவிலில்) வருடாந்த பங்குனி உத்தரப் பெருவிழா இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்தமாதம் நான்காம் திகதி தேர்த்திருவிழாவும், ஐந்தாம் திகதி பங்குனி உத்தரத்தன்று தீர்த்தோற்சவமும் இடம்பெறும். [அ]

## கல்கத்தாவிலும்...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

முற்றாகத் தகர்த்தெறியப்பட்டன.

இக்கட்டடங்கள் வர்த்தக நிலையங்களும் மக்கள் குடியிருப்புகளும் கலந்துள்ள பகுதியில் இருந்தன.

குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் கைவினைஞர்களும் மரவேலைத் தொழிலாளர்களும் ஆவர்.

இச்சம்பவத்துக்குத் தலைமறைவுக் குற்றவாளிக் கும்பல்களே பொறுப்பு எனத் தெரிவதாகவும் —

பம்பாய்க் குண்டுவெடிப்புச் சம்பவத்துக்கும் கல்கத்தா சம்பவத்துக்கும் தொடர்பு இருக்கின்றதா என்பது நிரூபிக்கப்படவில்லை என்றும் மாநில அதிகாரிகள் தெரிவித்தார்கள்.

குண்டு வெடிப்பில் தகர்ந்து போன ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று 100 வருட காலப் பழமை வாய்ந்தது என்று இந்தியன் எக்ஸ்பிறஸ் மற்றும் பயனியர் பத்திரிகைகள் தெரிவித்தன.

குண்டு வெடித்ததும் கட்டடங்கள் தீப்பற்றிக் கொண்டன என்றும்—

கட்டட இடிபாடுகளுக்கிடையில் இருந்து இன்னும் புகை வந்து கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடிப்புச் சத்தம் ஐந்து கிலோ மீற்றர் தூரம் வரை கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-3-5-6]

## மாலை 6 மணிக்குப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வல்கள் வருமாறு:-

வேலணையில் சுமார் 250 குடும்பங்களே வாழ்கின்றன. ஊர்காவற்றுறையில் சுமார் நூறு குடும்பங்களும் இந்தியாவில் இருந்து திரும்பிய 35 குடும்பங்களும் உள்ளன. வேலணையில் வயதானவர்களில் 28 பேர் இறந்துள்ளனர் அவர்கள் தமது குடும்பங்களைப் பிரிந்த மன வேதனை காரணமாகவே இறந்திருக்கலாம்.

வாரத்துக்கு ஒரு தடவையே உணவுப் பொருள்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அவை மக்களுக்குப் போதாது ஈ.பி.டி. பியினர் நடத்தும் தனியார் கடைகளில் வடபகுதிக்குக் கொண்டுவரத் தடைசெய்யப்பட்ட பொருள்கள் உட்படப் பலபொருள்கள் விற்பனையாகின்றன.

புளியங்கூடல் சந்திச் சுற்றாடலில் உள்ள பல வீடுகளின் கதவுகள், யன்னல்கள் கூரை மரங்கள் என்பவற்றைக் கழற்றி இராணுவத்தினர் கொத்தி விறகாக்குகின்றனர். தண்டனை வழங்கப்பட்ட சிப்பாய்கள் இவ்வேலையில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

வீடுகளின் கூரை சிற்றுகளைக் கழற்றிக் காவலரண்களுக்குப் பயன்படுத்துகின்றனர். சரவணையில் இருந்து (வடக்கு றோட்டில்) மண்டைதீவு வரை யாழ். கடல் நீரேரியைப் பார்த்தவாறு அனேகமாக 200 யாருக்கு ஓர் காவலரண் அமைக்கப்பட்டுள்ளது. அங்கு இரவில் இராணுவத்தினரும் கடற்படையினரும் சேர்ந்து காவல் கடமையில் ஈடுபடுகின்றனர்.

புளியங்கூடல் மாரிஅம்மன் கோவிலில் மூலஸ்தானம் புரட்டப்பட்டிருக்கிறது. அனேகமான கோவில்கள் மூடிக்கிடக்கின்றன. ஐந்தாம் புலத்தில் ஒரு கோவிலில் மட்டுமே பூசகர் ஒருவர் பூசைகளை நடத்துகிறார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்த மாணவர்கள் புங்குடுதீவு மகா வித்தியாலயத்தில் வைத்தே கற்பிக்கப்படுகின்றனர். அவர்கள் வாரத்தில் ஒரு தடவை வீடு செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

ஊர்காவற்றுறையில் பொலிஸ் நிலையம் இருந்த போதும் எவரும் அங்கு புகார் செய்யப்போவதில்லை. ஈ.பி.டி. பியினர் ''புலிகளின் குரல்'' வானொலிச் செய்திகளைக் கேட்டு அவற்றில் சில வற்றை செய்திப் பலகைகளில் எழுதிவிடுவதுண்டு — என்றார். (அ-111-162)

## மன்னாரில் குண்டு வீச்சு!

யாழ்ப்பாணம், மார்ச் 18

மன்னார் மாவட்டம் விடத்தல்தீவில் மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று முற்பகல் 10 45 மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தின.

அப்பகுதியில் மாறி மாறி நான்கு குண்டுகள் வீசப்பட்டன. சேத விவரங்கள் தெரிய வரவில்லை. (உ-5)

## நான்கு படகுகளை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படகுகளும் வெற்றிலைக்கட்டுகள் மற்றும் பொருள்களுடன் அல்லிப்பளையை நோக்கி வந்து கொண்டிருந்தன. எனது படகில் நானும் எனது உதவியாளரான எனது சகோதரர் பாக்கியராசாவும் (வயது 26) மற்றும் மூன்று வியாபாரிகளும் இருந்தோம்.

எமது படகுகள் கடலின் நடுப்பகுதியை அண்மித்த போது எமக்கு முன் சென்ற படகை நோக்கி கடற்படையினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். அப்படகில் இருந்த படகோட்டியின் உதவியாளரான ஸ்ரீ சோமா என்பவர் சூட்டுக்கு இலக்காகி படகினுள் விழுவதைக் கண்டேன்.

பீதி அடைந்த நாம் எமது படகில் இருந்து கடலில் குதித்தோம். படகைப் பிடித்தவாறு கடலுக்குள் நின்று கொண்டிருந்தோம்.

அச்சமயம் எம்மை நோக்கி வந்த படையினர் எம்மைப் படகில் ஏறும்படி கூறிச் சுட்டனர்.

என் கண் முன்னாலேயே எனது சகோதரர் சுடப்பட்டார். நான் சூட்டில் இருந்து தப்பி படகின் மறு பக்கத்துக்குச் சென்றபோது எனது படகின் பாய் என்மீது சரிந்து விழுந்து என்னை மூடிக் கொண்டது.

துப்பாக்கிச் சத்தம் ஓய்ந்த பின்னர் பாயை விலக்கிக் கொண்டு பார்த்தபோது எனது படகு உட்பட நான்கு படகுகளையும் கடற்படையினர் தமது படகுடன் கட்டி இழுத்துச் செல்வதைக் கண்டேன்.

படையினர் சென்ற பின்னர் அங்கிருந்து நீந்திக் கிளாலிக் கரையை அடைந்தேன்.

இப்படி அவர் கூறினார். படையினரால் கட்டி இழுத்துச் செல்லப்பட்ட படகுகள் மற்றும் அப்படகுகளில் இருந்த ஏனையோர் பற்றி இதுவரை தகவல் எதுவும் இல்லை என்று தெரிவிக்கப்படுகிறது (இ-15)

## 760 தபால்பொதி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வரப்படவில்லை. தபால் பொதிகள் இன்று எடுத்துவரப்பட்டால் நாளை முதல் அவை மக்களுக்கு விநியோகிக்கப்படும் என தபாலக வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன. (உ-5-87)

## மேலும் இருவர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விவரங்களை வெளியிட முடியாது என்றும் பம்பாய் கூட்டுப் பொலீஸ் கொமிஷனர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை—

டுபாயில் இருந்து கொண்டு சர்வதேச ரீதியில் பல்வேறு குற்றங்களைப் புரிந்து வந்தவர் எனக் கூறப்படும்— தற்போது பம்பாயில் தலைமறைவாகியிருக்கும்—டொன் தாவூத் இப்ராகிம் என்பவருக்கு பம்பாய் வெடிகுண்டு சம்பவத்துடன் தொடர்பு இருப்பதாக பொலீஸார் சந்தேகம் தெரிவித்தனர். (உ-5)

## கரையோர...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேரில் கண்டறிவதற்காக அங்கு விரைந்து சென்ற அமைச்சர் பைலட் நிலைமையை நேரில் அவதானித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

பம்பாய் நகரக் குண்டு வெடிப்புகளுக்கும் கல்கத்தா குண்டு வெடிப்புக்கும் தொடர்புகள் இருக்கின்றனவா என்பதைக் கூறுவதற்கு [illegible] என்றும் அவர் சொன்னார். (உ)

## கிரிக்கெட் ரசிகர்களை

# பொறுப்புடன் செயற்பட காவல்துறை வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மார்ச் 18

யாழ். நகரப் பிரதேசத்தில் கிரிக்கெட் ஆட்டங்கள் இடம் பெறும்போது, வீதிகளில் வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சலாகவோ அல்லது பொதுமக்களின் மனங்கள் புண்படக்கூடிய முறையிலோ நடந்துகொள்ள வேண்டாம் என தமிழீழக் காவல் துறையினர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர்.

பொதுமக்களில் பலர் காவல் பணிமனைகளுக்கு வந்து முறைப்பாடு செய்ததை அடுத்தே இத்தகைய வேண்டுகோள் விடுக்கப்படுவதாக காவல்துறைப் பொறுப்பாளர் திரு பா. நடேசன் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருக்கும் சென். ஜோன்ஸ் — மத்திய கல்லூரி கிரிக்கெட் ஆட்டத்தைப் பார்க்க வரும் மாணவர்கள், பொதுமக்கள் தமது சைக்கிள்களை பாதுகாப்பான முறையில் வைத்துக்கொள்ளுமாறும் அவர் கேட்டுள்ளார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் கேட்டிருப்பதாவது:-

தமிழீழத் தாயகத்தின் விடுதலைக்கான மண் மீட்புப் போர் நடந்து கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில், எமது மக்கள் அளப்பரிய தியாகங்களையும், அர்பணிப்புக்களையும் புரிந்து வருகின்றனர். சிங்கள அரசின் எத்தகைய கொடிய அடக்குமுறைகளுக்கும் முகம்கொடுக்க திடசங்கற்பம் பூண்டுள்ளனர் கட்டுப்பாடான, ஒழுங்கான நீதியான, உன்னதமான சமுதாயத்தின் விடிவை எதிர் நோக்கிய வண்ணம் உள்ளனர்; சிங்கள அரசின் இராணுவ நடவடிக்கை, பொருளாதாரத் தடை என்பவற்றிற்கெதிராக பெரும் போராட்டத்தையே நடத்திக் கொண்டிருக்கின்றனர்.

மக்கள் லட்சக் கணக்கில் இடம் பெயர்ந்து, அகதி முகாம்களில் இருந்தாலும் எமது தாயகத்தின் சொத்துக்களான மாணவர்களின் கல்வி உடல் வளர்ச்சி என்பவற்றிற்காக எமது இயக்கம் பெரும் பெரும் பணிகளை புரிந்து வருவதை நம் தேசம் நன்கறியும். — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## பொம்மர்கள் வட்டமிட்டன

தென்மராட்சி, மார்ச் 18

நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் இரண்டு பொம்மர்கள் கட்டைக்காட்டுப் பகுதியை வட்டமிட்டுச் சென்றன. (இ-117)

## மரம் நடுகை திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 18

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் மரம் நடுகைத்திட்டத்தின் கீழ் மருதனார்மடம் கோட்டத்தில் உள்ள மாணவர்களுக்கு சேமிப்புப் புத்தகம் வழங்கும் நடவடிக்கை நாளை 9 ஆம் திகதி நடைபெற உள்ளது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற உள்ள இந்த வைபவத்தில் சிறப்பு விருந்தினராக வலிகாமம் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திருக்குமரன் கலந்து கொள்வார்.

யாழ். மாவட்டப் பாடசாலைகள், பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றும் இந்த மரம் நடுகைத் திட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது தெரிந்ததே. தொடர்ந்து மூன்று ஆண்டுகளுக்கு இத்திட்டம் அமுல் செய்யப்படும். (இ)

## குடும்பஸ்தர் மரணம்

தலையில் வாச்சி வெட்டுக்கு இலக்காகி ஆபத்தான நிலையில் நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இளம் குடும்பஸ்தர் ஒருவர், பின்பு அங்கு மரணமானார்.

அராலிவடக்கில் நேற்று முன்தினம் இரவு 9 மணிக்கு இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த கே. கருணாகரன் (வயது 24) என்பவரே மரணமானவராவார்.

# எயர் லங்கா நிறுவனத்தின் விமானச் சேவை குறைப்பு

கொழும்பு, மார்ச் 18

'எயர்லங்கா' தனது விமானச் சேவைகளை மாத இறுதியில் இருந்து குறைக்க உள்ளது என்று நம்பப்படுகிறது.

இம்மாதம் 26 ஆம் திகதியிலிருந்து பிரஸல்ஸ், மூனிச், பேர்லின், ஜகார்த்தா, வியன்னா ஆகிய நகரங்களுக்கான விமானச் சேவைகளை எயர்லங்கா நிறுத்தப் போவதாகவும்—

அத்துடன் இம்மாதம் 28ஆம் திகதி முதல் சிட்னி, மெல்போன் ஆகிய நகரங்களுக்கான விமானச் சேவையும் நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

குடியியல், விமானப் போக்குவரத்துத் தொழிலில் ஏற்பட்டுள்ள உலகளாவிய மாற்றங்களுக்கு அமைய தனது விமானச் சேவையின் விமானப் பயணங்கள் தொடர்பான அட்டவணையையும் திருத்தியமைக்க வேண்டி உள்ளது என்று எயர் லங்கா தெரிவித்துள்ளது என்று கூறப்படுகின்றது. [இ[

# குமணவில் வந்த மருந்து விரைவில் விநியோகம்

சண்டிலிப்பாய், மார்ச் 18

யாழ். சுகாதார திணைக்களத்துக்கு 'குமண' கப்பல் மூலம் கொண்டு வரப்பட்ட மருந்து வகைகள் யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கும், மத்திய மருந்தகங்களுக்கும் விரைவில் விநியோகிக்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட மருந்துக் களஞ்சியப் பகுதியினர் இந்த மருந்து வகைகளை திணைக்கள வாகனம் மூலம் நேரடியாக வைத்தியசாலைகளுக்கு கொண்டு சென்று வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18-03-1993இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org